## 101. மெய்யான திராட்சை செடி

**பல்லவி**

மெய்யான திராட்சை செடி நீரே
உந்தன் செடியின் கொடி நானே – (2)

**அனுபல்லவி**

*உந்தன் செடியின் கொடியாக*
*என்றும் இணைந்து வாழ்ந்திடுவேன் - 2*

**சரணங்கள்**

1. கனித்தரா கொடி எதுவோ
அவற்றை அறுத்து போடுகிறீர்
கனி தருகின்ற கொடி எதுவோ
அதிக கனிகளை கொடுக்க வைக்கிறீர்
- உந்தன் செடியின்

2. உம்மாலன்றி என்னாலே
ஓன்றும் செய்ய முடியாதே
உம்மோடு இணைந்து இருந்திடுவேன்
மிகுந்த கனிகளை கொடுத்திடுவேன்
- உந்தன் செடியின்

3. உந்தன் வார்த்தை என் மனதில்
என்றும் நிலைத்து இருந்து விட்டால்
கேட்டுகொள்வது எதுவோ
அவற்றையே பெற்றுகொள்வேன்
- உந்தன் செடியின்